காலத்திற்கேற்ற
முறையில்
தங்கப் பவுண்
நகைகளை
தயாரித்தளிக்கும்
புதிய ஸ்தாபனம்

**நிர்மலா ஜுவல்லர்ஸ்**
(உரிமையாளர்: தா. இராசரத்தினம்)
கே. கே. எஸ். ரோட், - சுன்னுகம்.
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (26-6-66) இதழ் 139

பிலவ ஆனி 12 ரபி அவ் 6 ஞாயிற்றுக்கிழமை

பீடிகளில் சிறந்தது!
இறுதி வரை
இன்பமளிப்பது
முல்லா பீடிகளே
தயாரிப்பாளரும்
விநியோகஸ்தர்களும்:
முல்லா பீடி கம்பனி
கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

# பிரதமர் டட்லிக்கு சரித்திர வரவேற்பு

## மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரை பிரதமருக்கு வரவேற்பு

மட்டக்களப்பு, சனி

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்றுமாலை 4 மணிக்கு விசேஷ விமான மூலம் மட்டக்களப்பு வந்து சேர்ந்தார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரசாங்க அதிபர்களும், எம். பி.க்களும் அவரை வரவேற்றனர். பிரதமரை வரவேற்கும்முகமாக சாரணச்சிறுவர்கள் அணிவகுப்பு ஒன்றும் நடைபெற்றது. பிரதமர் உள்ளூரிலுள்ள இந்துக்கோயில் பூஜையொன்றில் கலந்து கொண்டார். இன்று தமிழரசுமகாநாட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுகமாக அவர் கல்முனைக்குப் புறப்பட்டார். கல்முனை வரையான 25 மைல் வீதி நெடுகிலும் பொந்தொகையான பந்தல்கள் பிரதமரை வரவேற்குமுகமாக அமைக்கப்பட்டிருந்தன. தோரணங்கள் கொண்ட வரவேற்பு வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

## 25 மைல் பாதை நெடுகிலும் மக்கள் திரண்டிருந்த காட்சி

### வீதிகள் தோறும் தோரணங்கள்; கல்முனை நகரமே விழாக்கோலம் பூண்டது

— நமது சிறப்பு நிருபர் —

இராசவரோதயஅரங்கு, (கல்முனை), சனி

அலங்காரத் தோரணங்களினாலும் வரவேற்பு வளைவுகளினாலும் விசேஷ மலர்ப்பந்தல்களினாலும் காட்சி ஜோடனைகளுக்கிடையே கண்ணைப்பறிக்கும் வர்ண விளக்குகளுடன் 'ஜாம் ஜாம்' என்று பூத்துக் குலுங்கி, புதுமெருகுடன் காட்சியளித்து, விழாக் கோலம் பூண்டிருக்கும் கல்முனை நகருக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று மாலை வந்துசேர்ந்தபொழுது அவருக்குச் சரித்திரப்பிரசித்திபெற்ற வரவேற்பு அளிக்கப்பட்டது;

மட்டக்களப்பிலிருந்து கல்முனை வந்து சேர்ந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா பெருந்திரளான மக்களினால் இங்கு வரவேற்கப்பட்டார். மங்கள வாத்தியங்களின் முழக்கத்தினுக்கிடையே கல்முனை கடற்கரை மைதானத்தில் கோலாகலமாக அமைக்கப்பட்ட இராசவரோதயம் அரங்குக்கு பிரதமர் டட்லி சேனநாயக்கா அழைத்துவரப்பட்டபொழுது வீதிகளின் இருமருங்கிலும் மக்கள் கைகூப்பி நின்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர், மலர் மாலைகள் பிரதமரின் கழுத்தில் விழுந்து மலைபோல குவிந்த வண்ணமிருந்தது. ஏராளமான மக்கள் அவர் மீது மலர்கள் தூவி மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டனர்.

இராசவரோதயம் அரங்கை பிரதமர் அடைந்தபொழுது அங்கு கூடிநின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் சிலநிமிட நேரம்வரை மகிழ்ச்சி கரகோஷம்செய்து வரவேற்றனர், பிரதமர் டட்லி புன்னகை பூத்த முகத்துடன் கூடிநின்ற மக்களுக்கு இருகை கூப்பி வணக்கம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்துடாக்டர் இ மு வி நாகநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

## விபுலானந்தர் அரங்கில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள்

— நமது நிருபர் —



விபுலானந்தர், அரங்கு (கல்முனை), சனி

விபுலானந்தா அரங்கில் நேற்றிரவு சுமார் 7-00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலை நிகழ்ச்சிகளுக்கு பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமை வகித்தார்

கலைநிகழ்ச்சிகளில் நடனம் சங்கீதம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, நாடகம் ஆகியன இடம்பெற்றன.

(5-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த பார்லிமென்ட் கூட்டத்தொடரில் மாவட்டமசோதா

— நமது சிறப்பு நிருபர் —

கல்முனை, சனி



தமிழரசுக் கட்சியின் கடந்த ஒருவருடகால பெறுபேறுகள்பற்றியும் அதன் விபரங்கள் பற்றியும் காரியதரிசி திரு. ஏ. அமிர்தலிங்கம் இன்று மகாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கையில் பாராளுமன்றத்தில் தமிழ் விசேஷ சட்டவிதிகள் சமர்ப்பிக்க தமிழரசுக் கட்சி எடுத்த முயற்சிபற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவிற்கும் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் திரு. அமிர்தலிங்கம் புகழ்மாலை சூட்டினார்.

நாட்டில் அவசரகால

(2-ம் பக்கம் பார்க்க)

இலக்கிய மகாநாடு

## "தமிழ் இலக்கியம் தனித்தன்மை வாய்ந்தது

### இம் மொழி எமது நாட்டிலும் சிறப்பு பெற வேண்டும்"

— நமது நிருபர் நவநாதபிள்ளை —

உமறுப்புலவர் அரங்கு, (கல்முனை) சனி

"ஒரு இனம் வாழ்ந்த வரலாற்றை, அந்த இனத்தின் கலை, கலாச்சாரத்தை எடுத்துக்கூறுவது இலக்கியமே. இந்தவகையில் தமிழ் இலக்கியம் தனித்தன்மை வாய்ந்தது."



இவ்வாறு தமிழரசுக் கட்சி மகாநாடுஇரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின்போது நேற்றுப் பிற்பகல் 2-30-க்கு உமறுப் புலவர் அரங்கில் நடைபெற்ற இலக்கிய மகாநாட்டில் மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை பேசுகையில் கூறினார்.

இலக்கிய மகாநாட்டுக்கு எம். பி. திரு. செ. இராஜதுரை தலைமை வகித்து மேலும் பேசுகையில் ஒவ்வொரு நாட்டிலும் இலக்கியம் ஒவ்வொரு குறிக்கோளைக் கொண்டிருக்கிறதென்றும் ஆனால் தமிழிலக்

(6-ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

ஸ்ரீ நயினாதிவு நாகபூஷணி அம்மன் கோவில் தென்கிழக்கு வீதியிலும், பாலத்துக்கு தெற்குப்புறமாகவுள்ள முதலாவது தம்பையா சத்திரம், தண்ணீர்ப் பந்தல் உரிமையாளரின் முக்கிய அறிவித்தல்: இத்தால் பொதுமக்கள் அறிய வேண்டியது மேற்படி (சத்திரம்) தண்ணீர்ப்பந்தலுக்கு எவராகுதல் தருமம் செய்யும்படி கேட்டால் கொடுக்க வேண்டாம் என்றும் நாங்கள் மேற்படி தண்ணீர்ப்பந்தலுக்கு பொது மக்களிடமிருந்து எதுவித பணமும் வசூலிப்பதில்லை என்பதையும் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வீதி, தம்பையா சத்திரம் தண்ணீர்ப்பந்தல் உரிமையாளர்: **க. த. சோமசேகரம்** சித்த. ஆயுர்வேத வைத்தியர். நயினாதீவு. 628

## "இலக்கியப்படைப்புகளின் வேகம் அதிகரிக்கப்படவேண்டும்"

— நமது நிருபர் —



"எமது நாட்டில் போதுமான இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. தமிழிலக்கியங்களை மேலும் படைத்து தமிழில் இனிமையைப் பரப்ப வேண்டும்" என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இலக்கிய மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

"இலக்கியம் எமது வாழ்வுடன் பின்னிக் கிடக்கிறது. ஆனால் இதனை வளர்ப்பதை சிலர் கஷ்டமாகக் கருதுகிறார்கள். வெறும் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிடுவதன்மூலம் மட்டும் நாம் தமிழ் இலக்கியத்தை வளர்க்க முடியாது. உண்மையான உள்ளப்பற்றுடன் தமிழ் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்த ஆராய்ச்சி நோக்குடன் வெளியிடுவதே நாம் செய்யும் இலக்கியச் சேவையாக இருக்கும்" என்றும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

கடவுளைப்பெற ஒரு விலையுண்டு அதுதான் 'நான்' எனும்7 அகந்தை.'நான் எனது' என்ற எண்ணங்களை விட்டால்தான் ஆன்மீக வழியில் முன்னேறமுடியும். —சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆனி மீ 12 உ (26-6-66)


## தமிழ் - சிங்கள நல்லுறவு

கல்முனையில் நடந்துள்ள தமிழரசுக் கட்சியின் பத்தாவது மகாநாடு, இந்நாட்டிலே தமிழ்—சிங்கள நல்லுறவை பல வகையிலும் பலப்படுத்த வழிசெய்துள்ளது அதனால் அதை இலங்கைச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டும்.

பிரதமர் டட்லி சேனநாயகா இம்மகாநாட்டுக்கு விஜயம் செய்து பேசியதும், தலைவர் டாக்டர் நாகநாதனின் அரிய தலைமையுரையும், இந்நாட்டின் இரு முக்கியசமூகத்தினரிடையேயும், பழையதப்பெண்ணங்களை நீக்கவும் புதிய நல்லுறவு பலப்பட்டு, நாட்டின் எதிர்காலம் மேலாக இருக்கும் என்ற நம்பிக்கையை அளிப்பதாகவும் உள்ளன.

இந்த ஜனநாயக ஆட்சி முறை நமக்குப் புதிது. நாடு விடுதலையடைந்பிதன் சென்ற 18 வருடங்களிலே இருதரப்பினராலும் பல அரசியல் தவறுகள் செய்யப்பட்டன அதிலும் சென்ற சுமார் 10 ஆண்டுகளில் தமிழருக்கு ஏற்பட்ட இன்னல்களை இங்கு விளக்கத் தேவையில்லை. ஜனநாயகமென்பதைப் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆட்சியென்று தவறுகக்கருதி வகுப்பு வெறியைக் கிளப்பி, சிறுபான்மை மக்களை, மனித நீதிக்கும் மாறாக, இம்சை செய்வதுதான் தேசாபிமானமென்று எண்ணி, சட்டங்களும் ஒருதலைப்பட்சமாக இயற்றப்பட்டன. இதிலிருந்து தங்களுக்கு எப்படி விமோசனம் பிறக்கபோகிறதோ என்று தமிழர் இளைத்தனர், போராடினர். தியாகம் செய்தனர்.

சிங்களப் பொதுமக்களும் மெதுவாக உண்மை உணர்ந்தனர். வகுப்பு வெறியர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட தீங்கையும் நாடு முன்னேற முடியாமல் தடுப்பதையும் உணர்ந்து சென்ற பொதுத்தேர்தல் மூலம் சரியான தீர்ப்பு அளித்தனர். வகுப்பு வெறியர்கள் வெகுவாக விரட்டியடிக்கப்பட்டனர். தமிழரின் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால்தான் ஆட்சியை நல்ல முறையில் நடத்த முடியுமென்ற நிர்ப்பந்த நிலையை இந்நாட்டுப் பொதுமக்கள் அத்தேர்தல் தீர்ப்பினால் ஏற்படுத்திவிட்டனர். அத்தீர்ப்பின் பயனே இன்றுள்ள தேசிய அரசாங்கமாகும்.

சென்ற 18 வருட காலத்திலே செய்யப்பட்டுவிட்ட பல பல அரசியல் தவறுகளையும் திருத்திக் கொள்ளவும், இரு சமூகங்களுக்கிடையேயும் நட்புறவும் ஒத்துழைப்பும் பலப்படவும் கூடுமானதைச் செய்ய வேண்டுமென்றும், இப்போதுள்ள அரிய சந்தர்ப்பத்தை இழக்கப்படாதென்றும், தேசியத் தலைவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பிரதமர் சேனநாயகா, தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் இவர்களது கல்முனைப் பேச்சுக்கள் இதற்குச் சான்று.

சிறுபான்மைச் சமூகத்தினரான தமிழரின் நல்வாழ்வும் பாதுகாப்பும் காகிதச் சட்டங்களிலோ, ஒப்பந்தங்களிலோ தங்கியிருக்கவில்லை. சிங்கள மக்களின் அபிமானத்தில்தான் உண்மையாக இது அடங்கியுள்ளது அதே போல, தமிழரின் ஒத்துழைப்பும் ஆதரவுமின்றி சிங்களவர் எதேச்சாதிகார ஆட்சியை நடத்த முடியாதென்பதைச் சிங்களத் தலைவர்களும் அனுபவத்தில் கண்டுவிட்டார்கள். ஆகவே இரு சார்பினரும் நாட்டின் நன்மைக்காகவும் தங்கள் நல்வாழ்வுக்காகவும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துழைக்க இப்போது உறுதியுடன் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தமிழருக்கு சமீப வருடங்களில் செய்யப்பட்ட பல அரசியல் தவறுகளை நீக்கவேண்டிய பெரிய காரியம்உள்ளது. இதில் முக்கியமானது மொழிப்பிரச்னை. இதைப் பற்றி சிறப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு விஷயத்தை மறக்கப்படாது. நாடுவிடுதலையடைவதற்குமுன் சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டு பத்துவருடம் அமுலில் இருந்து வந்தது. ஆனால் பின்னர் திடீரென ஒரு தலைப்பட்சமாக ஐ. தே. கட்சியும் சேர்ந்து தனிச் சிங்கள சட்டதை நிறைவேற்றியது. இதனால் தமிழருக்கும் பெரும் அரசியல் துரோகம் செய்யப்பட்டுவிட்டது. இந்த அநியாயத்தை நீக்கி, பழைய நிலையை படிப்படியாக ஏற்படுத்த வேண்டும். எந்தக் காரணங்களையும் இதற்குக் குறுக்கே நிற்க அனுமதிக்கக் கூடாது.

டாக்டர் நாகநாதன் தமது தலைமை உரையிலே, இவ் விஷயமாகக் கூறியுள்ள யோசனை மிக மிதமானது. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தமிழும் சிங்களமும் தெரிந்திருக்கவேண்டுமென்றும், ஏற்கெனவே ஐ. தே. கட்சியும் இதைத் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்துள்ளதென்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த யோசனையை இப்போது பிரதமர் டட்லி சேனநாயகா அமுலுக்குக்கொண்டுவந்தால், தமிழருக்கு ஓரளவு ஆறுதல் ஏற்படுவதுடன், நாம் இப்பத்திகளில் பன்முறையும் அறிவுறுத்தியதுபோல், நிர்வாகமும் அதிக சிக்கனமாகவும் திறமையாகவும் நடைபெறமுடியும்.

தமிழரின் எதிர்காலம் தமிழரின் கையில் தான் வெகுவாக உள்ளது. சிங்கள சமூகத்துடன் ஒப்பிடுகையில், தமிழர் இங்கு பல விதங்களிலும் பின்தங்கியுள்ளனர். உதாரணமாக மரவரிமுறையை எதிர்த்து தென்னிலங்கையில் அதை அமுல் நடத்தமுடியாமல் சிங்களத்தலைவர்கள் பெருங்கிளர்ச்சி செய்து தடுத்து விட்டார்கள். ஆனால் வடமாகாணத்தில் மரவரி முறையால் மதுபானம் அதிகரித்து பல விதங்களிலும் தமிழ் சமூகத்தை சீரழித்துவரினும் அந்த முறையை நீக்கவேண்டுமென்று கேட்கவும் எந்தத் தமிழ்த்தலைவரும் முன்வரவில்லை. ஏன்? காரணம் எதுவாயினும் இது பெரிய துரதிருஷ்டம்.

மதுவிலக்கு, சமூக ஒற்றுமை, கதர்கிராமக் கைத்தொழில், தீண்டாமை ஒழிப்புபோன்ற மகாத்மா காந்தியின் நிர்மாண திட்டத்தை தேசிய அரசாங்கம், அமுலுக்குக் கொண்டுவந்தாலே, நாடு சுதந்திரம் பெற்ற பயனை ஓரளவாவது அடையமுடியும். இதற்கான தீவிர முயற்சி எடுக்க சிறப்பாகத் தமிழ்த் தலைவர்களுக்கு இது நல்லதோர் சந்தர்ப்பமாகும். இது அவர்களது முக்கிய பொறுப்பும் கடமையும்கூட.

# தமிழுலகம் போற்றும் "அச்சுத்தொழிலாளி"

## வீரர் ம. பொ. சி. யின் மணிவிழா வைபவம்

தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களின் 60-ம ஆண்டு நிறைவு மணிவிழா இன்றுசென்னையிலும், தமிழ் கூறும் நல்லுலகிலே பல இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் தலைமையில், சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெறும் விழாவுக்குத்தலைமை தாங்குகின்றார். மணிவிழா மலரை, மதுரை ''தமிழ்நாடு'' பத்திரிகை அதிபரும், தொழிலதிபருமான திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் வெளியிடுகிறார். ராஜாஜி பொன்னாடை போர்த்துகிறார்.

புதுவை ராஜ்ய முதலமைச்சர் திரு. வேங்கட சுப்பா ரெட்டியார், ம. பொ. சி. எழுதிய 'கம்பர் கவி இன்பம்' என்ற நூலை வெளியிடுகிறார். பல்வேறு அரசியல்கட்சிகளின் தலைவர்களும், புலவர்களும், கலைஞர்களும் வாழ்த்துரை வழங்குகின்றார்கள்.

நாளைக் காலை அதே மண்டபத்தில் இவ்விழாவை ஒட்டிய மங்கல நிகழ்ச்சியில், ராஜாஜியும், சென்னை முதல் அமைச்சர் திரு. பக்தவத்ஸலமும் கலந்துகொள்ளுகின்றார்கள்என்றுசென்னை பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

### "தமிழ் வாரம்"

மணிவிழாக் குழுத்தலைவர் கவி கா. மு. ஷெரீப் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் நாட்டின் எல்லைகளை மீட்கவும், தலைநகரைக் காக்கவும் தலைவர் ம. பொ. சி. நடத்தியுள்ள போராட்டங்களையும், அவற்றில் அவர் அடைந்த வெற்றிகளையும் நாடறியும். மற்றும் ''தக்ஷிணப் பிரதேசத் திட்டம்'' போன்ற தடைகளைத் தகர்த்து இன்றுள்ள தமிழ் நாடு தனிமாநிலமாக அமைவதற்கு ம. பொ. சி. அவர்கள் ஆற்றியுள்ள பணியும் அனைவரும் அறிந்ததே.

தமிழகத்தைதன்னகத்தே கொண்ட பாரதப்பெருநாட்டில், அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க, உலக உத்தமர் காந்தியடிகள் தலைமையில் நடந்த விடுதலைப் போரில் ஈடுபட்டு, கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் அதிலே கலந்திருந்து. 6 முறை சிறை புகுந்து, அபராதம், பொலிஸ் தடியடி, மாகாணம் விட்டு மாகாணம் கடத்தல் ஆகிய இன்னல்களையும் ஏற்று தேச பக்த அணியிலே ம. பொ. சி. முதலிடம் பெற்றிருக்கிறார்.

கடந்தகாலத்தில் அவர் ஆற்றிவந்துள்ள பணிகள் ஒரு புறம் இருக்க, எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்கான திட்டங்கள் பலவற்றையும் மக்கள் முன்வைத்து, அவற்றிற்குவெற்றி தேட தலைவர் ம. பொ. சி. அயராது உழைத்துவருகிறார். தமிழ் இனத்தவரை ஒன்றுபடுத்தவும், பாரத தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தவும் மொழிப்பற்று— நாட்டுப்பற்று— தெய்வப்பற்று— ஆகிய பண்புகளை வளர்க்கவும் ம. பொ. சி. அவர்கள் செய்துவரும் பிரச்சாரம் தமிழகத்தாரே அன்றி, பாரத நாட்டார் அனைவரும் அறிந்ததாகும். இப்படி எல்லாத்துறைகளிலும் பணியாற்றிவரும் ஒருபெருமக [illegible] கொள்வது தமிழர் ஒவ்வொருவருடைய கடமை என்பதை நினைப்பூட்டடத் தேவையில்லை.

ஜூன் 26 முதல் ஒரு வாரம்வரை'' தமிழ்வாரம்'' என்னும் பெயரில் ம. பொ. சி மணி விழாவைக் கொண்டாட ஏற்படாகிவருகிறது. கட்சிச்சார்பற்ற முறையில் தமிழர் எல்லோரும்இதனைக் கொண்டாட வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. மணிவிழா நாளில் தலைவர் ம. பொ. சி. அவர்களுக்கு (அறுபதாயிரம் ரூபாய்) பணமுடிப்பு வழங்க எண்ணியுள்ளோம். எனவே, தாங்களும் தங்கள் நண்பர்களும், மனமுவந்த ஒத்துழைப்பும் பேருதவியும் நல்கி, எங்கள் முயற்சிக்கு ஆக்கம்தந்து, தலைவர் ம. பொ. சி. அவர்கள் மணிவிழா சிறப்புடன் நடைபெற உதவி புரியவேண்டுகிறோம்.

### திருகோணமலையில்

திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத் 'தொண்டர்' திரு. இ. சண்முகராசா அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில், தமிழகத்தின் தனிச்சிறப்புமிக்க தேசிய விடுதலைப் பெரியாராகவும், சிலம்புச் செல்வராகவும் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் மானிட ஒருமைப்பாட்டை நாடறியச்செய்யும் திருத்தொண்டில் ஈடுபாடுடையவராகவும் விளங்கும் தலைவர் உயர்திரு ம. பொ. சிவஞானகிராமணிஐயா அவர்களின் மணி விழாவைத் தழுவி மன்றத்தில்பாராட்டு செலுத்த ஒழுங்கு செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டு, அத்துடன் சென்னையிலிருந்து கிடைத்த ஓர் அழகிய மணிவிழா போஸ்டரையும் அனுப்பியுள்ளார்.

அதிலடங்கிய அவரதுஉருவப்படத்தைக் கண்டதும் எனக்குப் பழைய நினைவுகள் பல வந்தன. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு சென்னையிலே தேசியவீரரும் ''தொழிலாளர் தலைவரு மாகிய டாக்டர் வரதராஜுலுநாயுடு அவர்கள் நடத்திய 'தமிழ்நாடு' பத்திரிகையில் ம. பொ. சி. அவர்கள் ஒரு கம்பாஸிட்டராக இருந்தார். சம்பளம் காலாகாலத்தில் கொடுபடாததால் ம. பொ. சி. தலைமையில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். பின்னர் ம. பொ. சி. தேசிய விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்து, சிறை சென்றார். அவரை ''சி'' வகுப்புக் கைதியாக நடத்தியதை அறிந்ததும், டாக்டர் நாயுடு தலையிட்டு, அவரை 'பி' வகுப்புக்கு மாற்றும்படி செய்தார். வேலைநிறுத்தம் செய்தும், முதலாளியின் நன்மதிப்பை வீரர் ம. பொ. சி பூரணமாகப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறைப் பட்டிருக்கையில் இவ்வீரரின் உடல் நலம் பெரிதும் கெட்டது. என்றாலும் அவர் உறுதியுடன் பன்முறையும் நாட்டுக்காகவும், தமிழகத்துக்காகவும் சிறை சென்றார். அவர் ஈடுபட்ட போராட்டமெல்லாம் வெற்றியில்தான் முடிந்தன. தோல்வியை அறியாத வீரத் தமிழரவர். எந்தக் கூட்டத்திலும் அவர் பேசுவதாயின், அந்தச் சிங்கநாதம் நம் செவிகளில் பல நாள் ஒலித்துக் கொண்டிருக்கும். கேட்கக் கேட்க இனிக்கும் அவரது உயிருள்ள ''சிலம்புப் பேச்சு'' ஒவ்வொரு சொல்லும் அவர் உள்ளத்திலிருந்து உணர்ச்சியுடன் [illegible]ப்படுவதால், கேட்போர் மனதை வசப்படுத்திவிடும்.

சென்ற ஆண்டு திருத்தணிக்குச் சென்றபோது, ம. பொ. சி. அவர்களின் நினைப்பே அதிகம் வந்தது. அவர் மட்டும் அப்போராட்டம் நடத்தியிராவிடில், திருத்தணி தமிழகத்துக்கு மீண்டும் கிடைத்திருக்குமா? அம்முருகனை மீண்டும் தமிழருக்கு மீட்டுக் கொடுத்தவரை தமிழர் என்றென்றும் நன்றியுடன் போற்றுவர்.

அவர் ஓர் அரசியல் கட்சித் தலைவராயினும் பல கட்சித் தலைவர்களும் தமிழகப் பெரியார்களும் அவரது மணிவிழாவில் கலந்து கொண்டு அவரை வாழ்த்துவது, அவர் எல்லோருடைய அன்பையும் எவ்வளவு அமோகமாகப் பெற்றுள்ளாரென்பதைக் காட்டுகின்றது. ஒரு சாதாரண தொழிலாளியும், சுயமுயற்சியால் நானிலம் போற்றும் ஒரு பெரிய தலைவராகவர முடியுமென்பதை அவர் தமது வீரவாழ்வுமூலம் நமக்குக் காட்டியுள்ளார். இத்தமிழ் வீரர் நீடூழி வாழ்ந்து, தமிழ் கூறும் நல்லுலகனைத்துக்கும் நற்றொண்டு புரிய எல்லாம் வல்ல அந்தத் திருத்தணி முருகனை தமிழ்கூறும் நல்லுலகத்துடன் சேர்ந்து மனமாறப் பிரார்த்திக்கின்றேன்.

— ஐயாறன்

## சபை நிறுவப்பட்டது

சண்டிலிப்பாய், சனி

சண்டிலிப்பாய் வேவிப்பதி ஐயனார் கோவிலின் புனருத்தாரண சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் போது பின்வருவோர்நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. த. செல்லத்துரை, உபதலைவர்: திரு. எம். திருவிளங்கம், காரியதரிசி: திரு. ரி. குலநாயகம், உபகாரியதரிசி: திரு எஸ். செல்வரத்தினம், பொருளாளர்: திரு. வீ. செல்லத்துரை.

நிர்வாகசபை அங்கத்தவர்கள் வருமாறு: திருவாளர்கள் எஸ். தம்பையா, எஸ். கந்தையா, எஸ். பத்மநாதன், ஏ. செந்திவடிவேல், வி. குமாரசிங்கம், கே. அரியரத்தினம், கே. இராசையா.

ஆலயம் பொது கோயிலாகப் பிரகடனப் படுத்தப்படல் வேண்டுமென்றும் அதன் நிர்வாகம் சிறந்த முறையில் ஒரு சபையினால் நடாத்தப்படல் வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அடுத்த . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டும் இந்த மசோதா பாராளுமன்றத்தில் எவ்வித தடையுமின்றி நிறைவேற்றப்பட்டது. இது தமிழரசுக்கட்சியின் ஒரு சாதனையாகும். தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு நிறுத்தப்பட்டுவந்த வருடாந்த உயர்வுச் சம்பளத்தையும் பதவிஉயர்வையும் பெற்றுக் கொடுக்க தமிழரசுக்கட்சி மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்திருக்கின்றன. இதனையும்விடப் புதிய அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாகவும் அவர்களின் சம்பள உயர்வுபற்றியும் நாம் தற்பொழுது அரசாங்கத்துடன் பேச்சு நடத்திக் கொண்டு வருகின்றோம்'' என்று தமது அறிக்கையில் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்கள் இதுவரை எதிர்பார்த்துவந்த மாவட்டசபை மசோதா எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படும், இதனால் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள எத்தனையோ பிரச்னைகளுக்கு நாம் தீர்வு காணலாம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சுகர்ணோ ராஜினாமா செய்யவேண்டும்

## தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பு முன்னணி வற்புறுத்து

### அதிபரின் உரையை நிராகரிக்கவும் வேண்டுகோள்

ஜாகர்த்தா, ஜூன் 25

ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ ராஜினாமாச் செய்யவேண்டும் என இந்தோனேஷிய தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பு முன்னணி வற்புறுத்தியது.

விஞ்ஞானிகளும் கல்விமான்களும் இந்த முன்னணியில் இருக்கிறார்கள்.

டாக்டர் சுகர்ணோ முறைகேடான நிர்வாகம் நடத்தினார் என்றும், கடந்த புதன்கிழமை மக்கள் ஆலோசனை காங்கிரஸில் அவர் நிகழ்த்திய உரையை நிராகரிக்கும் கடும் சொற்களடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிடும்படியும், ஜெனரல் நசூதியானுக்கு அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

டாக்டர் சுகர்ணோ தமது உரையில் கடந்த தவறுகளுக்கு விளக்கம் கூறவில்லை என்றும் கடந்த அக்டோபர் புரட்சிபற்றி எதுவுமே குறிப்பிடவில்லை என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஜாகர்த்தாவில் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் நேற்று நடத்திய அணிவகுப்பில், இந்தோனேஷியாவின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க நிபுணர்களைக் கொண்ட மந்திரிசபையை அமைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பெரடே கடந்த புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்தார் எனக்கூறி அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. தமது தண்டனையை எதிர்த்து அவர் ஜனாதிபதி சுகர்ணோவுக்கு விண்ணப்பிப்பார் என அறிவிக்கப்பட்டது.

## டாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்கு பாப்பரசர் ஆதரவு

### ஒரிஸா அகதிகளுக்கு 25,000 டலர் வழங்குகிறார்

வத்திக்கான், ஜூன் 25

டாஷ்கண்ட் ஒப்பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் இதன் மூலம் இந்தியா-பாகிஸ் இருநாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பு, சமூக முன்னேற்றம், புனருத்தாரணம் ஆகியன சாத்தியமாகும் என்றும் பாப்பரசர் பால் நேற்று கருதினல்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் கூறினார்.

இருநாடுகளும் ஒற்றுமையுடன் செயலாற்றுவது மூலம் உலக சமாதானத்துக்கு சிறப்பாகப் பாடுபட முடியும் என்றும் கூறினார்.

ஒரிஸா வெள்ள அகதிகளுக்கு 25,000 டாலர்களையும் பால் வழங்கியிருக்கிறார்.

வியட்னாமில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம்பற்றிக் குறிப்பிட்ட பாப்பரசர் இவ்விஷயத்தில் தாம் தொடர்ந்து முயற்சி செய்யப் போவதாயும் குறிப்பிட்டார். ஆபிரிக்காவின் இளம் சுதந்திர நாடுகளின் முன்னேற்றத்தில் தமது அக்கறையை பாப்பரசர் வெளிப்படுத்தினார்.

ரொடீஷியா விஷயத்தில் தாம் சிரத்தை கொண்டிருப்பதாயும் அங்கு ஒரு தீர்வு ஏற்படும் என நம்புவதாயும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

#### இந்தியாவுக்கு

## மேற்கு ஜெர்மனி அதிக உதவி

பொன், ஜூன் 25

இந்தியாவுக்கு மேலும் கடனுதவி அளிப்பது பற்றி மேற்கு ஜெர்மன் மந்திரிசபை ஆராயவிருக்கிறது.

இந்திய நிதிமந்திரி திரு. சௌத்திரி, பிரதமர் எர்ஹாட் உட்பட சகல மந்திரிகளுடனும் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்தியா தனது ரூபாய் மதிப்பைக்குறைத்தது மிகவும் தைரியமான நடவடிக்கை என மேற்கு ஜெர்மன் தலைவர்கள் கூறினர்.

திரு. சௌத்திரி நாளை லண்டன் புறப்படுகிறார்.

## ரஷ்ய ராக்கெட்டை டிகால் பார்ப்பார்

மாஸ்கோ, ஜூன் 25

பிரெஞ்சு அதிபர் டிகால் ரஷ்யாவில் தொடர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். கஸாக்ஸ்தானிலுள்ள ராக்கெட் நிலையத்தை டிகால் பார்வையிடுவார் என அறிவிக்கப்பட்டது. வான்வெளிக்கு ராக்கெட் ஒன்று அனுப்பப்படும் காட்சியையும் அவர் நேரில் பார்க்கக்கூடும்.

சோவியத்தின் ராக்கெட் நிலையத்துக்கு ஒரு மேற்கு நாட்டுத் தலைவர் அழைத்துச்செல்லப்படுவது இதுவே முதல் தடவை எனக் கூறப்பட்டது.

## கிழக்கு பாகிஸ்தான்

டாக்கா, ஜூன் 25

கிழக்கு பாகிஸ்தானில் மாகாண சுயாட்சிகோரி ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது பெரும் இயக்கத்தை ஆரம்பிக்க அவாமிலீக்கும், இதர கட்சிகளும் முடிவுசெய்திருக்கின்றன.

அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறும் பல கூட்டங்களில் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

அவாமிலீக் தலைவர்களில் ஒருவரான திரு. சௌத்ரி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

## பிரிட்டனில் இந்தியர் தியேட்டர்

லண்டன், ஜூன் 25

இந்தியருக்குச் சொந்தமான முதலாவது சினிமா தியேட்டர் லீசெஸ்டரில் விரைவில் திறக்கப்படும்.

இந்தியா — பாகிஸ்தான் படங்களைத் திரையிடுவதற்காகவே இது திறக்கப்படவிருக்கிறது. (பி. டி. ஐ)

## சீனுவுக்கு ஆஸி. கோதுமை

கான்பரா, ஜூன் 25

330 லட்சம் டலர் பெறுமதியான 220 லட்சம் புஷல் கோதுமையை சீனாவுக்கு ஆஸ்திரேலியா விற்கவிருக்கிறது.

1961-ம் ஆண்டுமுதல் இதுவரை 4775 லட்சம் புஷல் கோதுமை சீனாவுக்கு விற்கப்பட்டிருக்கிறது.

## அல்பேனியாவில் சீனப் பிரதமர்

ராவல்பிண்டி, ஜூன் 25

சீனப் பிரதம மந்திரி திரு சூ-என்-லாய் வருகிற செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

நேற்று அவர் ருமேனியத் தலைவர்களுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு, அல்பேனியா சென்றார். அல்பேனியத் தலைநகர் டிரானாவில் சூவுக்கு அமோகமான வரவேற்பளிக்கப்பட்டது.

## மைசூரில் 530 பேர் கைது

பங்களூர், ஜூன் 25

மைசூர் மகாராஷ்டிர எல்லைக் கிளர்ச்சியையொட்டி நேற்று 530 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

ரய்ச்சூரில் பொலிசார்மீது கற்கள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸ் தடியடிப் பிரயோகம் இடம் பெற்றது.

குல்பர்க்கில் ரயிலை நிறுத்த முயன்றவர்கள் மீது பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகித்தனர். கைகலப்பில் 22 பொலிசாரும், ரயில் சாரதியும், கிளீனரும் காயமடைந்தனர்.

## மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா

புதுடில்லி, ஜூன் 25

மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா சம்மந்தமான ஏற்பாடுகளுக்கு ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனத்தை அணுகியிருப்பதாய் காந்தி ஸ்மாரக் நிதியின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

## தென்மொழியை பயிலுங்கள்

புதுடில்லி, ஜூன் 25

வடஇந்திய மக்கள் குறைந்தது ஒரு தென்னிந்திய மொழியையாவது கற்க வேண்டும் என பிரதமர் இந்திரா காந்தி ஒரு கூட்டத்தில் பேசும்போது கேட்டுக் கொண்டார்.

# சர்வதேச சங்கீத சபையின் புதிய தலைவர்

### டாக்டர் நாராயணமேனன் தெரிவு

ரோட்டர்டாம், ஜூன் 25

அகில இந்திய ரேடியோவின் டைரக்டர் ஜெனரலான டாக்டர் வி.கே. நாராயண மேனன், சர்வதேச சங்கீத சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ரோட்டர்டாமில் நடைபெற்ற சர்வதேச சங்கீத சபையின் 11-வது பொதுச் சபையில் மிகப்பெரும்பாலான வாக்குகளால் நாராயண மேனன் தெரிவு செய்யப்பட்டார்.

1964-ம் ஆண்டு முதல் டாக்டர் மேனன் சபையின் உபதலைவராக இருந்துவந்திருக்கிறார். 1960-ம் ஆண்டு முதல் சர்வதேச சங்கீத சபையின் அங்கத்தினராகவும், 1962-ம் ஆண்டு முதல் அதன் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினராகவும் டாக்டர் மேனன் இருந்திருக்கிறார். சர்வதேசப் புகழ் வாய்ந்த இசை வல்லுனர்களான யெஹூதி மெனுஹின், ஹோவார்ட் ஹான்ஸன் (அமெரிக்கா), ஷோஸ்டாகோவிச் (ரஷ்யா) போன்றவர்கள் சர்வதேச சங்கீத சபையில் இருக்கிறார்கள். (பி. டி. ஐ)

## வியட்னாமில் அமெரிக்காவின் நிலை என்ன?

### ஜப்பான் விளக்கம் கோருகிறது

பீகிங், ஜூன் 25

வியட்னாம் சம்பந்தமாக அமெரிக்க—சீன வெளிநாட்டுமந்திரிகள் சந்தித்துப் பேசவேண்டும் என்ற செனட்டர் மான்ஸ்பீல்ட்டின் யோசனையை பீகிங் நிராகரித்துவிட்டது.

தாய்லந்துக்கு விஜயம் செய்திருந்த பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. ஸ்டுவர்ட் அங்கு வியட்னாம் பற்றிப் பேச்சுக்கள் நடத்தினார். சீட்டோ மந்திரிகள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு அவர் அடுத்து ஆஸ்திரேலியா செல்வார்.

வியட்னாமில் அமெரிக்காவின் நிலைபற்றி விளக்கம் தருமாறு ஜப்பான் கேட்டிருப்பதாக ஜப்பானிய பார்லிமெண்டில் அறிவிக்கப்பட்டது. வியட்னாமில் சண்டை நிற்கவேண்டும் என்றும், 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தப்படி வியட்னாம் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்றும் ரஷ்யாவும், பிரான்சும் கூறியிருக்கின்றன.

இதற்கிடையில் தென் வியட்னாம் மத்திய மலைப் பகுதியில் 800 வியட்காங்கியரை அமெரிக்கர்கள் கொன்றனராம்.

## வேலைநிறுத்தம் நின்றது

திருவனந்தபுரம், ஜூன் 25

கேரளத்தில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது

## வெள்ளத்துக்கு 12 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 25

கச்சார் ஜில்லாவில் 12 பேர் வெள்ளத்தில் மூழ்கி மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

## வெளிமந்திரியும் செல்வார்

புதுடில்லி, ஜூன் 25

பிரதமர் இந்திரா காந்தி ஐக்கிய அரபியக் குடியரசு யூகோஸ்லேவியா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும்போது வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண் சிங்கும் அவருடன் செல்வார். முதலிரண்டு நாடுகளுக்கு வெளிநாட்டு ராஜாங்க மந்திரி திரு. தினேஷ்சிங்கும் செல்வார்.

## 127 மீறல்கள்

புதுடில்லி, ஜூன் 25

பாகிஸ்தான், டாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்குப்பின் இந்தியாவின் வான, நிலப் பகுதிகளில் 127 எல்லை மீறல்களைச் செய்திருப்பதாயும், 127 ஆட்சேபக் குறிப்புகளில் 21-க்கு மட்டுமே அது பதிலளித்திருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டது.

## 11 பாகிஸ்தானியர் கைது

புதுடில்லி, ஜூன் 25

கடந்த புதன்கிழமை இந்தியப் பகுதிக்குள் ஊடுருவிய 11 பாகிஸ்தானியரை குஜராத் பொலிசார் கைதுசெய்திருக்கிறார்கள்

## க்ஷயரோகக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் இன்று க்ஷயரோகத் தடுப்புப் பொதுக்கூட்டமொன்று நடைபெறும் இதனை டாக்டர் பா. இராஜரத்தினம் ஏற்பாடுசெய்துள்ளார். வருகிற மாதம் 21-ம் தேதி குடும்பக்கட்டுப்பாட்டுத் தடுப்புக்கூட்டமும் நடைபெறும்.

#### ஓராண்டு அமெரிக்க ராணுவச் செலவு

## ரூபா 27,550,00,00,000

வாஷிங்டன், ஜூன் 25

அடுத்தமாதம் ஆரம்பமாகும் அமெரிக்காவின் புதிய பட்ஜட்டில் இதுவரை இல்லாத அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது.

5800 கோடி டாலர் புதிய ஆண்டில் பாதுகாப்புக்காகச் செலவிடப்படும். இலங்கை மதிப்பின்படி இது 27,550 கோடி ரூபாயாகும்.

வியட்னாம் யுத்தம் அடுத்த ஆண்டு முழுவதும் நீடிக்கும் எனக் கருதப்படுவதால் சென்ற ஆண்டைவிட இது 475 கோடி ரூபாய் அதிகமாகும்.

இந்த [illegible]ற்காக பாதுகாப்பு பட்ஜட் செனட்டிற்குச்செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நமது நாட்டிலும் ஆதீனங்கள் தோன்ற வேண்டும்"

— நீதியரசர்

## 'சாதிவேற்றுமைகளை ஒழிக்க மடாலயங்கள் பாடுபடவேண்டும்'

கொடிகாமம், சனி

"தென்னிந்தியாவிலுள்ள ஆதீனங்கள்போல், இந் நாட்டிலும் சிறப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆதீனங்கள் தோன்றினால் தான் தமிழ்மொழிவளரும். தமிழ் இளைஞர்கள், தமிழ் மொழியை நன்கு படித்து, ஆராய்ச்சி செய்தால்தான் தமிழ்க்கலையை, கலாச்சாரத்தை வளர்க்க முடியும். தமிழ்க்கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு இப்படியான மடாலயங்கள் அவசியம்".

கொடிகாமம் திருநாவுக்கரசநாயனார் குருபூசை மடாலயத்தை நேற்றிரவு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ சி. திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் 15,000 ரூபாசெலவில் கட்டப்பட்ட இம்மடாலயத்திறப்புவிழாவிற்குமுன்னாள் ரிஜிஸ்டிரார் எம். கே. சிதம்பரப்பிள்ளை தலைமை தாங்கினார். கச்சாய் கிராம சபைமுன்னாள் தலைவர் திரு, எம்.கே. செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவ தம்பரம் பேசும்போது, கோயில்களில் சப்பரத்திருவிழா நடத்தும் பொருட்டு. சிகரத்திற்கும் வாண வேடிக்கைகளுக்கும் சதுர்க்கச் சேரிகளுக்கும் ஆயிரக்கணக்கில் செலவு செய்வதன்மூலம், சமயத்தை வளர்க்க முடியாதென்றும் அப்பணத்தின் மூலம் சமூகத் தொண்டு புரிவதனால், கடவுளின் அருளைப் பெற முடியுமென்றும் குறிப்பிட்டார்.

### தமிழ்மொழியின் சிறப்பு

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ சி. மேலும்பேசியதாவது: நான் மலேசியாவிற்கு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு சென்றிருந்தபொழுது அங்கு வந்த பலநாட்டு அறிஞர்கள் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள். அவர்களின் வாயிலாக தமிழ் மொழியின் சிறப்புக்கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். பிரான்சு தேசத்தில் இருந்து வந்த அறிஞர்ஒருவர்தொல்காப்பியம் 2-ம் சங்க காலத்தில் எழுதப்பட்டதாகக்கூறினார்.

தமிழ்மொழி இப்பொழுதும் கன்னியாகவே இருக்கிருள். காரணம் அவளுக்குகடவுள் அருள்இருப்பது தான். பொதிகமலையில் உற்பத்தியாகி, 1-ம் சங்க காலத்தில் பிறந்து, அரசர்களின் அரண்மனைகளில் வளர்ந்து, வைகை ஆற்றில் தவழ்ந்து வந்த தமிழ்க்கன்னி, இன்னும் பேதையாகவே காட்சியளிக்கிருள். இதையிட்டு நாமெல்லாம் பெருமைப்பட வேண்டும்.

3-ம் சங்ககாலம் கிறிஸ்துவிற்குப்பின் 300வருடங்கள் இருந்ததாகவும், அச்சங்கத்தில் ஈழத்துப்பூதனார் என்பவர் இங்கிருந்து சென்று கலந்து கொண்டதாகவும் சங்க நூல்கள்மூலம் அறியலாம். இடைக்காலத்தில் ஒருசில நூற்ருண்டுகள் தமிழர்கள் புத்தசமயத்தைதழுவியபோது, நாயனார்களும், ஆழ்வார்களும் தோன்றி, தேவாரங்கள், திருமுறைகள் மூலம் சமயத்தை வளர்த்தார்கள் ஆனால் இன்று நாட்டில், மறம் வளர்ந்து அறம் ஒழிந்து வருகிறது. கொலை, களவு, சண்டை சச்சரவுகூடுகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் படுகொலைகள் நடப்பதற்குக்காரணம் மது பானம்தான். இப்படியான மடாலயங்கள் மூலம், இளைஞர்களுக்கு சமயவளர்ச்சியைப் புகுத்தவேண்டும். அறம் வளருவது இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது

தமிழ்மொழியின் உற்பத்தி கிறிஸ்துவிற்குமுன் 7000 வருடங்களுக்கு முற்பட்டது தமிழரின் கலாச்சாரம் தான், எகிப்து தேசத்திற்கு பரவி, அங்கிருந்து ரோமாபுரிக்குபரவி, பின் மேல் நாட்டவர்களிடம் பரவியது. தமிழ் பண்பாட்டை, கலாச்சாரத்தை வளர்க்க இளைஞர் முன்வரவேண்டும்.

உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது: சமய வாழ்க்கையை இளைஞர்கள் புறக்கணித்து வருகிருர்கள். சமயவாழ்க்கையில் பற்று இல்லாத காரணத்தினால் தான் வாலிபர் மத்தியில் தற்கொலைகள் நடக்கின்றன. இப்படியான மடாலயங்கள் மூலம்சமயப் பற்றை ஏற்படுத்தவேண்டும். நமது சமயத்தில் சில அர்த்தமற்ற கருத்துக்கள் புகுத்தப்பட்டிருப்பதால், இளைஞர்கள் சமயத்தை புறக்கணிக்கின்றனர். சாதிப்பாகுபாடு, சைவசமயத்திற்கு உடந்தையானதல்ல. இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட சாதிப் பாகுபாடு ஒழியவேண்டும். சாதிவேற்றுமைகளை ஒழிக்க, மடாலயங்கள் பாடுபட வேணடும். இச்சேவையை செய்ய இளைஞர்கள்முன்வர வேண்டும் சைவசமயத்தில் உள்ள பெரியகுறை சமுதாய சேவையில் ஈடுபடாமல் விடுவது மற்றச்சமயங்களைப்போல சமூகசேவையில் ஈடுபட சைவ இளைஞர் முன்வரவேண்டும்.

பண்டிதர் பொன். வேலுப்பிள்ளை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை, வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. தங்கராசா மற்றும் பலர் பேசினர்.

## 'கதம்பமாலை'

தவிர்க்கமுடியாத காரணங்களினால் 'கதம்ப மாலை' இன்று வெளிவரவில்லை. அடுத்த போயா தினத்திற்கு மறுநாள் வழமை போல் 'கதம்ப மாலை' வெளிவரும்.

## மாணிக்கர் குருபூசை

வட்டுக்கோட்டை, சனி

அராலி மேற்கு திருவாசக மன்றத்தினர் மாணிக்கவாசகர் குருபூசையை சிறப்பாகக் கொண்டாடினர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் செல்வன் மு கிருஷ்ணமூர்த்தியின் 'விதிவிடல்கன்' கதாகலாக்ஷேபமும் இடம் பெற்றது.

கோண்டாவில், சனி

"மாணிக்கவாசகரது திருவாசகத்தை மனமுருக ஓதினால் மனமாசு அகலுகிறது இன்றைய இளைஞர்கள் நல்வழியிலே செல்வதற்கு மாணிக்கவாசகர் போன்ற தெய்வீக நிலையடைந்த பெரியார்களை நினைவு கூருதல் அவசியம்".

அனலைதீவு சதாசிவ ஆங்கில பாடசாலை மண்டபத்தில்நடைபெற்ற மாணிக்கர் குருபூசை விழாவில் திரு. ப. கணபதி மேற்கண்டவாறு பேசினார். மற்றும் திரு. த. வடிவேலு, செல்வி செ. கமலாதேவி, க. இளையதம்பி ஆகியோர் பேசினர். செல்வ, திலகமலர் குழுவினரது இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

ஃ ஃ ஃ

கோண்டாவில், சனி

இணுவில் சைவமகாஜனக் கல்லூரி மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. வ. நடராசா தலைமையில் மாணிக்கவாசகர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. க. அருளம்பலம், திரு. இ. குழந்தைவேலு, திரு. நா. பதஞ்சலி ஆகியோர் பேசினர்.

## மலேரியா பரவுகிறது

கொழும்பு, சனி

இலங்கையில் இப்போது மலேரியா மீண்டும் பரவி வருவதாக மலேரியா தடுப்பு இயக்கம் அறிவித்துள்ளது. இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் விஞ்ஞானத் துறை அதிகாரிகளும் ஆலோசனை நடத்தி வருகிருர்கள்.

சென்ற வருட இறுதியிலிருந்து மலேரியா அதிகமாகப் பரவி வருவதாக கணிக்கப்பட்டுள்ளது. தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப் படாததாலேயே இவ்விதம் மீண்டும் மலேரியா பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தி[illegible] மலேரியா அதிக[illegible] டுள்ளது

# ஷேர்ட்டுகளுக்கு கட்டுப்பாடுவிலை இல்லை?

கொழும்பு, சனி

ஷேர்ட்வகைகள் தயாரிக்கும் ஸ்தாபனங்களின் தூது கோஷ்டி ஒன்று நேற்று கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவைச் சந்தித்து ஷேர்ட்வகைகளையும் மற்றும் 'ரெடிமேட்' தயாரிப்பு வகைகளையும் கட்டுப்பாட்டுவிலையின்கீழ்கொண்டு வரும் உத்தேசத்திட்டம் பற்றியும் இதனால் தங்களுக்கு ஏற்படும் நஷ்டங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடாத்தியது.

பேச்சுவார்த்தையின் பின்னர் ஷேர்ட்களும் மற்றும் துணித்தயாரிப்பு வகைகளும் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொண்டுவரப்படமாட்டாதென்று மந்திரி கருத்துத்தெரிவித்ததாக ஷேர்ட் தயாரிக்கும் ஸ்தாபனங்களின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

கடந்த சில வாரங்களாக ஷேர்ட்டுகள் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டுமென்ற கருத்து தற்காலிக வர்த்தக மந்திரியினால் தெரிவிக்கப்பட்டதன் பேரில் பலவிதமான வதந்திகள் நிலவிவந்தன ஆனால் கைத்தொழில் மந்திரியின் வாக்குறுதியுடன் இன்னும் சில தினங்களில் நிலைமை பழையநிலைக்கு வருமென ஜவுளி வர்த்தகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தரமாணவ மன்றத்தினர் மணிவாசகர் விழாவை மிகவும் கோலாகலமான முறையில் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடினர். விழாவுக்கு மன்றத் தலைவர்செல்வன் கு பொ. சி. வரதராசா தலைமைவகித்தார்.



யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சுருவில் சின்னத்துரை வைத்திலிங்கம் இவ்வாண்டு சென்னை பல்கலைக் கழக தமிழ் வித்துவான் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் ஒருவரே இவ்வாண்டு இலங்கையில் சித்தியடைந்துள்ளார் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட இவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் மாணவர். தற்பொழுது இவர் தெமிட்டக்கொடை அரசினர் தமிழ் வித்தியாசாலையில் படிப்பிக்கின்ருர்.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6 30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா
நடித்த
பொம்மைக்கல்யாணம்

REGAL—JAFFNA
NOW SHOWING
Alfred Hitch Cock's
SABOTEUR
(Thrilling Action Story)

29 புதன் முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
ஜெயலலிதா — ஸ்ரீகாந்த்
ஆஷா, நிர்மலா
மற்றும் பலர் நடிக்கும்
"வெண்ணிற ஆடை"

கடைசி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (அம்பாறை)
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
தெய்வத்தாய்

"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரீ சேட்
● ரெறி சேட்
● ரெமி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● காலமேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
32A, கே கே எஸ். ரோட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கடற்தொழிலாளருக்கு

ஜப்பானிலிருந்து கடற்தொழில் சம்பந்தமான சகல உபகரணங்களும் இறக்குமதிசெய்ய விரும்புவோர், 10-7-66க்கு முன் ரூபா 3 அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும். ''சிவஸ்தன்'', சுந்தர் மடம், யாழ்ப்பாணம். 627

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

பொதுவேலைப் பகுதி

என் 13;2 மன்னர் அரசினர் வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிலையத்தில் மாற்றங்கள் செய்து அமைத்தல். (2) தலைமன்னர் அரசினர் வைத்தியசாலையில் சிறிய பணியாளருக்கென ஐந்து சமையலறைகள் கொண்ட கட்டடம் கட்டுதல். கேள்விகள் முடிவு திகதி 20-7-66. இதன் முழு விபரங்களுக்கும் 24-6-66ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். 3263


## புதிய கல்வித் திட்டம் மாணவருக்கு அதிக பலனளிக்கும்

### விளையாட்டுப் போட்டியில் எம். பி.

உடுப்பிட்டி, சனி

'தேர்தலிலும், விளையாட்டுப்போட்டிகளிலும் வெற்றி தோல்வி மாறிமாறி வரும். இதற்காக மனம் தளரக் கூடாது. இவைகளில் ஈடுபடுவோர் இரண்டையும் ஒரே மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பழகவேண்டும்' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் சொன்னார்.

உடுப்பிட்டி வட்டார தமிழ்பாடசாலைகளின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் வடபிரதேச வித்தியாதரிசி திரு. சி. ஏ ஞானசேகரம் தலைமையில் நடைபெற்றது. அப்போது திரு சிவசிதம்பரம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்

''அரசாங்கம் விரைவில் கல்வித்திட்டமொன்றை அமுல் நடத்தவிருக்கிறது. மாணவர்களிடையே உயர் கல்வி, தொழிற் கல்வியைப் போதிக்கும் வகைகளைச்செய்யும் இத்திட்டம், மாணவர்கள் சிலர் எஸ். எஸ். சி படித்துவிட்டு வேலையற்று இருப்பதும், மற்றும் சிலர் பட்டப்படிப்புப் படிப்பதும் வேதனையளிக்கக்கூடியதாகும், இம்முறை ஒழிக்கப்பட்டு அனைவரும் உயர்கல்வி கற்க இம்மசோதா வகை செய்யும். மாணவர்களின் நல்வாழ்வுக்கும், அரசாங்கத்தின் கல்வித்திட்டம் வெற்றிபெறவும் ஆசிரியர்களிடையே ஒற்றுமையும், அவர்களின் ஒத்துழைப்பும் தேவை. மனிதனின் சுயமரியாதையையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பது கல்வியேயாகும். ஆசிரியர்கள் தங்களின் இடமாற்றப் பிரச்னைகளுடன் மாணவர்களின் கலவியைக் குழப்புதல் கூடாது'' என்றும் திரு. மு. சிவசிதம்பரம் கூறினார்

உடுப்பிட்டிப்பகுதி வித்தியாதரிசி திரு வீ. தர்மசங்கரி, மற்றும் பலரும் பேசினர்.

## சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மாள் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை நடைபெறும்.

இச்சித்திரத்தேர் திருநெல்வேலி சிற்பாசாரியார் வி. ஆறுமுகத்தின் புதல்வர்களான தம்பித்துரை சகோதரர்களால் நிர்மாணிக்கப்பட்டது. வெள்ளோட்ட விழாவன்று தலைமைச்சிற்பாசாரியாரான திரு. ஆ. தம்பித்துரைக்கு 'கலாகேசரி' என்ற பட்டத்தை வழங்க தேவஸ்தான சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர். இவ்வைபவத்துக்கு காணிநீர்ப்பாசன இலாகா நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமைதாங்குவார்.

## தமிழாராய்ச்சிக் கழக செயலாளர் இருதய அடிகள்

### இலங்கைக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தற்சமயம் இலங்கைவந்திருக்கும் சென்னை லோயலாக் கல்லூரி இந்திய தத்துவ தர்க்கப்பேராசிரியரும் 'தமிழ் பண்பாடு' சஞ்சிகையின், ஆசிரியரும்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளருமான வண. சுவாமி இக்னேசியஸ் இருதயம் அடிகளார் விடுத்துள்ள செய்தியில் கூறியதாவது:-

''ஒரு தமிழ் மாணவனாகவும் யாத்திரிகனாகவும் இலங்கைக்கு வந்துள்ளநான் நமது முன்னோர்கள் கைக்கொண்ட இந்திய தத்துவ சாஸ்திரத்தையும் சிறப்பாக சித்தாந்தக் கருத்துக்களையும் ஆராய்ந்துவருகின்றேன். எல்லா மதங்களும் உடன்பாடாக ஒன்றுபடக் கூடிய ஒரு மத்தியவழியைத் தோற்றுவிப்பதிலும் அதனை விரிவுபடுத்துவதிலும் எனக்கு நிரம்பிய ஈடுபாடுண்டு.

நாம் முன்பு கருத்துவேற்றுமைப் பட்டுக்கொண்ட அம்சங்களில் கூட உடன்பாட்டைகொண்டுவரமுடியுமென்ற திடமானநம்பிக்கை எனக்குண்டு. இத்தகையஒரு உடன்பாடான மத்திய வழியை முன்வைத்து பரஸ்பர நல்லெண்ணத்தையும் அன்பையும் பரப்ப வேண்டும். இவ்விரண்டும் அனுகூலமானபோது நம மத்தியிலுள்ள எல்லா வேற்றுமைகளையும் களைந்து ஒருவரையொருவர் சரிவரப் புரிந்து கொண்டு எங்கும்சகோதரத்துவத்தை வளர்க்க முடியுமென்பதில் எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

## 'அருட்செல்வமே சிறந்த செல்வம்'

கோண்டாவில், சனி

''இறைவனை அன்பினால் நீக்கமின்றி தொடர்பு வைத்துக்கொள்ளும்மார்க்கம் சன்மார்க்கம் எனப்படும். இம்மார்க்கத்தைத்தான்மாணிக்கவாசகர் கடைப்பிடித்து இறைவனுடைய பேரின்பத்தைப்பெற்றார். இளமையில் ஒருவன் மனத்தைக்கட்டுப்படுத்தி அருளோடு கூடிய மனதை இறைவழியில் செலுத்தத் தவறினால்அவன் என்றும் மன அடக்கமின்றி தீய நெறியிலே செல்லத் தலைப்படுவான்.''

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் அம்பலவாணர் அரங்கில் திரு வ. கணபதிப்பிள்ளை தலைமையில்நடைபெற்ற மணிவாசகர் விழாவில் புலவர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளைமேற்கண்டவாறுகூறினார். அவர் மேலும் பேசுகையில:-

ஒருவனுக்கு எல்லாவிதமான செல்வங்கள் கிடைக்கலாம். ஆனால் அருளோடு கூடிய செல்வம் இல்லையாயின் அச்செல்வத்தால் யாதொரு பயனுமில்லை, இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமின்றி நிறைந்திருந்தும் அவனை நாம்காண முடியாததற்குக் காரணம் நாம்கொண்டுள்ள பந்த பாசங்களே. பாசங்களை ஒழித்தாலொழிய இறைவன் பேரின்பத்தையடைய முடியாது என்று பேசினார்.

திரு. சு. புண்ணியலிங்கம் பேசுகையில்; இறைவனைச் சிக்கனப் பிடித்தால்தான் நல்ல உணர்வுகள், சிந்தனைகள் மனதில் எழும் என்றார். மற்றும் பலரும் பேசினர்.

## மீண்டும் தலைவரானார்

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை புலோலி கிராமசபைத் தலைவராக திரு. த. சிதம்பரப்பிள்ளை ஏகமனதாக மீண்டும்தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக திரு. தங்கராசா தெரிவுசெய்யப்பட்டார். புலோலி கிராமசபை மண்டபத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர் தலைமையில் இத்தெரிவு நடைபெற்றது.

## வருடாந்த கூட்டம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு ''நசரேத்'' சனசமூகநிலையத்தின் வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்பட்டனர்.

பாதுகாவலர்: திரு. ம. பெனடிக்ட், தலைவர்: திரு. அ. யோசேப்பு, உபதலைவர்: திரு. அ. குருசுகாரியதரிசி: திரு. ம. அம்புரோசு, தனாதிகாரி திரு. இ. காணிக்கை. நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## சனசமூக நிலைய வள்ளுவர் விழா

அல்லைப்பிட்டி, சனி

அல்லைப்பிட்டி வாகீசர் சன சமூக நிலையத்தவர் எடுக்கும் திருவள்ளுவர் விழா புதன்கிழமை அல்லைப்பிட்டி வாகீசர் சன சமூக நிலையத்தில் நடைபெறும். இவ்விழாவுக்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் க. சி. குலரத்தினம், சி. சிவப்பிரகாசம் ஆகியவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். 'வள்ளுவன் கண்ட வாழ்வு' என்ற பொருளில் கவிஞர் இ. நாகராஜனும், 'ஏகசாட்சி' என்ற பொருளில் கவிஞர் தில்லைச் சிவனும் பாமாலை புனைந்திசைப்பார்கள்.

இசையரங்கைத் தொடர்ந்து நாடகம் இடம்பெறும்.

## மாணவர் புதிய சாதனைகள்

ஊர்காவற்றுறை. சனி

யாழ்ப்பாண மாவட்டமத்தியமகாவித்தியாலயங்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவன் எஸ். தனபாலசுந்தரம் புதிய சாதனைகளை நிலைநாட்டினார்.

கனிஷ்ட பிரிவுக்கான 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம் என்பனவற்றில் இம் மாணவர் முதலிடத்தைப்பெற்றார்.


## வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளர்கள்

சிறந்த ரகப் பொருட்கள் வீடுகளுக்குச் சென்று விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. சிறந்த கொமிஷன் கொடுக்கப்படும். 27-6-66ல் நேரில் வரவும். 86, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 592

நெசவுத் தறிகள்

9 நெசவுத் தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லெட்சுமி மரக்காலை, ஊர்காவற்றுறை, ஏ. பசுபதி. 596

### வாடகைக்கு

கடைகள்

நான்கு கடைகள் மணிக்கூட்டு வீதியில் வாடகைக்கு உண்டு. 21, மணிக் கூட்டு வீதியிலிருக்கும் திருமதி மதியாபரணத்தைத் தொடர்பு கொள்ளவும். 594

### விற்பனைக்கு

நெற்காணி

புங்குடுதீவு மேற்கில் 6-ம் வட்டாரத்திலுள்ள தனி நாவற்புலமென்னும் காணி விற்பனவுக்குள்ளது. தேவையானவர்கள், வி. நா. சண்முகநாதன், 1-ம் வட்டாரம், புங்குடுதீவு மேற்கு, இவரிடம் தொடர்பு கொள்க. பரப்பு நெல் இலாச்சம் 35 1/2. 590

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம் நீரிழிவு பீநிசம் முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## ''ஒரு புசல்வீதம் நெல் சேமிப்பதில் விவசாயிகள் ஈடுபடவேண்டும்''

### தேசியசேமிப்பு விழாவில் வவனியா நகரசபைத் தலைவர்

வவனியா, வெள்ளி

''உலக சரித்திரத்திலே பண்டைக்காலந்தொட்டு சேமிப்பு இயக்கம் நடைமுறையில் இருந்துவந்திருப்பதைப் பல ஆதாரங்கள் மூலம் நாம் அறிகிறோம். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவருமே சேமிப்பில் ஊக்கம் காட்ட வேண்டும். இன்று ஈழம் வாழ் மக்களும் சேமிப்பில் அக்கறை காட்டவேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்'' என்று வவனியா திறந்த வெளியரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய சேமிப்புவிழாவில் வவனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா பிரதம பேச்சாளராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

''நாம் சேமிப்பில் ஊக்கம் காட்டினால் தான் நாடு முன்னேறும். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சேமிப்பின் அவசியத்தையுணர்ந்து அதில் ஈடுபடவேண்டும். தனிமனிதன் வாழ்க்கை வளமுறவோ அன்றிப் பொதுநலம் கருதியோ ஒவ்வொருவரும் சேமித்தால் நாம் முன்னேறுவது மட்டுமின்றி நம் நாடும் நிச்சயம் வளமுறும். இன்று நம் நாட்டில் போதிய பொருளாதார வசதி இருந்தால் அண்டைநாடுகளின் உதவியைக் கோரலாம் என்றும் அவர் கூறினார்.

வன்னிநாட்டு மக்களின் 99 விகிதத்தினரும் விவசாயிகளே. இவர்கள் ஒவ்வொருவரும் தேசிய சேமிப்பிற்காக தம் விளைச்சலில் ஏக்கருக்குக் குறைந்தது ஒரு புசல் வீதமாகுதல் நெல் சேமிப்பார்களேயாகில் தமக்கும் நாட்டுக்கும் சேவை செய்தவர்களாவர் என்றும் அவர் கூறினார்.

வவனியா தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. புவனலிங்கம் பேசுகையில், இலங்கையில் இன்று உணவு உற்பத்தி ஐம்பது வீதமே செய்கை பண்ணப்பட்டு மக்களுக்கு உதவுகிறது. ஆனால் இந்த உற்பத்தி இலங்கையின் அரைப் பங்கு தேவையைத் தான் பூர்த்தி செய்கிறது என்று கூறினார்.

இன்று அரசாங்கம் மக்களுக்காக இலவசமாகவே செய்யும் உதவிகளின் முக்கியமாக வருடமொன்றுக்கு கல்வியில் 30 கோடி ரூபாவும் சுகாதாரத்திற்காக 30 கோடி ரூபாவும் இன்னும் பல செலவுகளிலும் சுமார் நூறு கோடி ரூபாவும் செலவிடுகிறது. ஒருவனுக்குவருடமொன்றுக்கு நூறு ரூபா வீதம் அரசாங்கம் செலவு செய்கிறது. இத்தகைய தேவைகளை அரசாங்கம் பணத்தைச் செலவிடுகையில் நாட்டின் பொருளாதாரமும் உயர வேண்டிய அவசியமேற்படுகிறது. நாம் ஒவ்வொரும் நாளாந்தம் 6 சதவீதமாகிலும் சேமிப்பிற்காகப் பயன்படுத்தினால் நிச்சயம் பலனிருக்கும். மகாவலி கங்கை திட்டப்படி வடக்கே வரும் போது நாட்டின் உற்பத்தி பெருகவும் நிச்சயம் வழி பிறக்கும் என்றே நம்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

வவனியாவில் மூன்றரை கோடி ரூபா சேமிப்பில் போடப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நாட்டில் இப்பொழுது உள்ள குளங்களை திருத்தி அதன் உதவியால் காடாகக் காட்சியளிக்கும் நிலங்களை நல் நிலமாக்கி விவசாயம் செய்தால் இலங்கைக்கு போதுமான நெல் வன்னிப் பகுதிகளில் உற்பத்தி செய்யலாம். விவசாயத்திலும் கமத்தொழிலிலும் கூடிய கவனமெடுத்து செய்ய வேண்டும். அந்நிய நாட்டில் உற்பத்தி செய்த உடை, உணவுப் பொருட்களை பாவனைக்கு எடுக்கக்கூடாதென சபதம் செய்து நாம் உற்பத்தி செய்த உடை, உணவுப் பொருள்களை உபயோகிக்கவேண்டுமென உறுதி செய்தால் நமது நாடு முன்னேற முடியும்''.

## விபுலானந்தர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இங்கு வந்திருந்த ஏராளமான மக்களுக்கு நேற்றிரவு இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள் மனதுக்குத் தெம்பூட்டுவதாக அமைந்திருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் பிரச்னைக்கு சமஷ்டி இறுதித் தீர்வு

# தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்

## தமிழரசு செயற்குழு தீர்மானங்கள்

கல்முனை, வெள்ளி

**நேற்று தமிழரசுக்கட்சியின் செயற்குழு செய்துகொண்ட தீர்மானங்களை, இன்று கூடிய விஷயாலோசனைக்கமிட்டி அங்கீகரித்தது. சமஷ்டி ஆட்சி பற்றி வலியுறுத்தியும், தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

தேசிய ஒற்றுமை கருதியும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி அங்கம் வகிப்பதை ஆதரித்து செயற்குழுக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை விஷயாலோசனைக் குழு ஏற்றுக்கொண்டது.

"சமஷ்டி அரசாங்கம் அமைக்கப்படுவதனால் மட்டுமே இலங்கை போன்ற பல இனமக்கள் வாழும் நாட்டில் அரசியல் பிரச்னைக்கு இறுதித் தீர் காண முடியும் என்பதை மீண்டும் ஒரு முறை நம்பிக்கையுடன் கட்சி வலியுறுத்துகிறது'' என்ற செயற்குழு தீர்மானத்தையும் விஷயாலோசனைக் கமிட்டிஅங்கீகரித்தது.

செயற்குழுவினால் முடிவு செய்யப்பட்டு விஷயாலோசனைக்கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு தீர்மானங்களில் முக்கியமானவை வருமாறு:-

○ தமிழ் மொழி (விஷேச) சட்டம் இயற்றப்பட்டு சில மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் அதை முழுமையாக அமுல் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாதைவிட்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் பற்றியும் கட்சிஅக்கறை கொண்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் திருப்திப்படக்கூடிய அளவுக்கு இவற்றைப் பூரணமாக அமுல் நடத்தத் தேவையான நிர்வாக பீடத்தை அமைக்குமாறு கட்சிஅரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

○ பல மொழிபேசும் மக்கள் வாழும் நாடுகளில் தேசிய ஒற்றுமை கருதியும் குறிப்பிட்ட மொழிபேசும் மக்களின்தேவைகளைப் பூர்த்திசெய்யவும் மொழிவாரிப் பல்கலைக்கழகங்கள்ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுபோல, இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கென சகல வசதிகளுமுடைய பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படவேண்டியதற்கு தக்க சமயம் வந்துவிட்டது என்பதை மகாநாடு பிரகடனப்படுத்துகிறது. பல்கலைக்கழகம் வடமாகண மக்களுக்கும்வசதியானஓர் இடத்தில்கிழக்கு மாகாணத்தில் நிறுவப்படலாம். இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்பேசும்மக்களை சேர்ந்த வெவ்வேறு சார்புடைய மக்களினதும் கலாசிசாக்கவும் போதிய வசதிகள் செய்யப்படவேண்டும் என்றும், தேசிய ஒற்றுமைகருதி தற்போதைய இலங்கைப் பல்கலைக்கழகம் இருமொழி போதனை பல்கலைக்கழகமாக தொடர்ந்து இயங்கவேண்டும் என்றும் மகாநாடு தீர்மானிக்கிறது.

○ மாவட்ட சபைகளை அமைப்பதுபற்றி தேசிய அரசாங்கம் தனது முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதை தமிழரசுக்கட்சி வரவேற்கிறது. மாவட்டசபைகளை அமைக்க மிகவிரைவில் சட்டம் இயற்றப்படவேண்டும் எனவும் கட்சி கோருகிறது.

---

# கோலாகலமான தமிழரசு மகாநாடு

## கல்முனை! நகரை அலங்கரிக்கும் வரவேற்பு வளைவுகள்

கல்முனை, (தமிழரசுமகாநாடு) வெள்ளி

தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசியமகாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலையில் நடைபெற்ற சைக்கிள் ஊர்வலத்துடன் ஆரம்பமானது.

பெருந்தொகையான சைக்கிள்கள் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக்கொடிகளைத்தாங்கிய வண்ணம் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

திருக்கோவிலிலிருந்து வந்த சைக்கிள் பவனிக்கு ஆறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யு வி. அரியநாயகம் தலைமை தாங்கினார். காரைதீவிலிருந்து வந்த சைக்கிள் ஊர்வலத்வதுக்கு டாக்டர் பரசுராமர் தலைமைதாங்கினார். பெரிய நீலாவணையிலிருந்து வந்த சைக்கிள் கோஷ்டிக்கு திரு வன்னியசிங்கம் தலைமை தாங்கினார். இந்த சைக்கிள் ஊர்வலக் கோஷ்டியினர் மகாநாடு நடைபெற்ற இடத்தை வந்தடைந்த போது திரு. எஸ். ஜே. வி; டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் உட்பட எம். பி. க்களும் பிரமுகர்களும் அவர்களை வரவேற்றனர்.

பாத்திமா கல்லூரி மைதானத்தில் விசேஷ சிரத்துடன் கூடிய மேடை மீதுதர். வர்கள் அமர்ந்திருந்தனலே சிரத்தையொட்டி அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தலில் ஆண்களும் பெண்களுமாகப் பலர் திரண்டிருந்தனர்.

காலையில் சைக்கிள் ஊர்வலம் 'வன்னியசிங்கம் அரங்கு' எனப்பெயர் சூட்டப்பட்ட இப்பந்தலை வந்தடைந்தபின் தொண்டர் அணிவகுப்பு நடைபெற்றது.

அடுத்துதலைவர் திரு. எஸ். ஜே, வி. செல்வநாயகம் கட்சிக்கொடியை ஏற்றி வைத்தார். வெள்ளை உடை அணிந்த மாணவிகள் தேசிய கொடியேற்றும்கம்பத்தைச் சுற்றி நின்று தேசிய கீதம் பாடினர்.

பின்னர் மகாநாட்டு வரவேற்புக்குழுத்தலைவர் ஜனாப் செ. செ. மசூர் மௌலானா வரவேற்புரை நிகழ்த்தினார். வரவேற்புரையின் பின்னர் கட்சியின் புதிய தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையுரை நிகழ்த்தினார்.

கல்முனைப் பட்டினத்தின் நுழைவாயிலான பாண்டிருப்பு—பாயற்பிட்டிமுனை சந்திப்பில் பெரிய வரவேற்பு வளைவும் அதிலிருந்து பாத்திமாக் கல்லூரி மைதானத்துக்குச்செல்லும்இடம்வரையும் கல்முனை கடற்கரை மைதானத்துக்குச் செல்லும் பாதையின் இருமருங்கும் மகரதோரணங்களும் தமிழரசு மூவர்ணக் கொடிகளும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

கல்முனைச் சந்தியில் கடற்கரை மைதானத்துக்குச் செல்லும் பாதையின் மூன்றால் அமைக்கப்பட்டுள்ள வளைவின் உயரத்தில் திரு. செல்வநாயகத்தின் படமும் அதன்கீழ் மறைந்த தமிழரசுத் தலைவர்கள் திரு வன்னியசிங்கம், வி, ஏ. கந்தையா, என். ஆர். ராஜவரோதயம்ஆகியோரின்படங்களும் வரையப்பட்டுள்ளன.

பிரதமரும் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் சனிக்கிழமை மாலை உரை நிகழ்த்தவிருக்கும் கடற்கரைமைதானமும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

---

# வேலைநிறுத்தத்தை வாபஸ் செய்யும்

கொழும்பு, வெள்ளி

தோட்டத் தொழிலாளருக்கு 17 ரூ. 50 சத விசேஷ படி வழங்கப்படவேண்டும் எனக் கோரி வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிற் சங்கங்களின் ஒன்றான தொழிலாளர் கழகம். (தமிழரசுக் கட்சி சார்புடையது) இம்மாதம் 26-ந் திகதி வேலை நிறுத்தத்தை வாபஸ் செய்துவிடும். குறிப்பிட்ட திகதியிலிருந்து தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர் வேலைக்குத் திரும்புவர். ஜ. தொ. காவைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வர் எனத் தெரிகிறது.

# கொழும்பில் புதிய தொற்றுநோய்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மாவட்டத்தில் 'டிப்பீரியா' என்ற நோய் பரவிவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிகவும் பயங்கரமான இத்தொற்று நோயால் இதுவரை சிலரே பீடிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

---

மாதர் மகாநாடு

# "அரட்டையடிப்பதை நிறுத்தி கைத்தொழிலில் ஈடுபடுக"

## தமிழ்ப் பெண்களுக்கு அழைப்பு

— நமது நிருபர் நவநாதபிள்ளை —

பாடும்மீன் அரங்கு (கல்முனை), சனி

**'எமது பொருளாதாரத்தை வளர்ப்பதில் தமிழ்ப் பெண்களுக்குப் பெரும் பங்குண்டு. நாம் முன்னேறுவதற்கு ஒரே வழி வீட்டிலிருந்துகொண்டு பெண்கள் வீணாக அரட்டை அடிப்பதைக்கைவிட்டு குடிசைக் கைத்தொழில் ஈடுபடுவதே.'**

பாடும்மீன் அரங்கில் நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற மாதர் மகாநாட்டில் திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

'அன்று எமது உரிமைகள் பறிக்கப்பட்டபொழுது வீறுகொண்டெழுந்த தமிழ்த் தலைவர்களுடன் கைகோர்த்து உரிமைப் போராட்டத்தில் குதித்தவர்கள் தமிழ்மாதர்கள் தான் என்பதை சரித்திரம் உணரும் தமிழ்மாதர்கள் தியாகம்செய்யவும் தயாராக இருந்தனர். இருந்தபோதிலும் இந்தப் பணி இப்பொழுது பூர்த்திபெற்றுவிட்டதாக நாம் கருத முடியாது. தமிழினம் இப்பொழுதுதான் எமது நாட்டில் தலைதூக்கிவருகிறது'' என்றும் திருமதி அமிர்தலிங்கம் தெரிவித்தார்,

''பொருளாதாரத்துறையிலும் நாம் இன்னும் முன்னேறவில்லை. தமிழ்மாதர்கள் குடிசைக்கைத்தொழில் ஈடுபட்டு நாட்டையும் நமது இனத்தையும் முன்னேற்றவேண்டும்''.

---

வவனியா

# காங்கிரஸ் மகாநாடு ஆகஸ்டில்நடைபெறும்

## பிரதமர், மந்திரிகளை அழைக்க உத்தேசம்

— நமது நிருபர் கனகு —

வவனியா, ஞாயிறு

வவனியாவில் நடைபெறவிருக்கும் தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டிற்கு யார் யாரை அழைப்பது என்பது பற்றி இம்மாதம் 30-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்க்காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இறுதி முடிவுசெய்யப்படும் என வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இம்மகாநாடு நடத்த வேண்டிய தேதிகள் பற்றியும் இக்கூட்டத்தில் இறுதி முடிவு செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா செல்லும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கட்சியின் பொதுச்செயலாளராக இருப்பதல் அவர் இலங்கை திரும்பியபின்பே மகாநாடு நடைபெறுமென்றும் அநேகமாக ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் தமிழ்க்காங்கிரஸ் மகாநாடு நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் சுமார் ஒன்றரை மாத காலத்தின் பின்னரே இலங்கை திரும்புவாரென அறியப்படுகிறது.

வவனியாவில் நடைபெறும் காங்கிரஸ் மகாநாட்டில் பிரதமரையும் சில மந்திரிகளையும் அரசாங்கக் கட்சி எம். பி. க்களையும் அழைப்பது பற்றி கமிட்டிக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

---

## 97-ம் இலக்கம் படும் பாடு!

வவனியா, சனி

இங்குள்ளசிலபண்டகசாலைகளில் 97-ம் இலக்க கூப்பன்களையும் வெட்டி எடுத்துக் கொள்வதாக அறியப்படுகிறது.

இந்த இலக்கக் கூப்பன் துணிகள் வாங்குவதற்கு மட்டுமே உபயோகிக்கப்படுத்தக்கூடியதாக இருக்க இப்பண்டகசாலைகளில்உள்ளவர்கள் இதனை வெட்டுவது மிக மோசமான செயல் எனக் கருதப்படுகிறது. சமீபத்தில் வவனியா அரசாங்க அதிபரின் 97-ம் இலக்க கூப்பனும் இப்படி அரிசி விநியோகிக்கும் ஸ்தாபனம் ஒன்றில் வெட்டி எடுக்கப்பட்டதாம். இதனை அரசாங்க அதிபர் உதவி கூட்டுறவு ஆணையாளரிடம் அறிவித்தபோது தவறுதலாக வெட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாம்.

---

## தமிழ் இலக்கிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கியத்தில் காதல், சோகம் வீரத்துடன் அரசியலும் கலந்திருக்கிறதென்றும் கூறினர்.

"தமிழிலிருக்கும் சிறந்த இலங்கியங்கள் வேறு எந்த மொழியிலும் இருக்கமுடியாது. உலக நூல் திருக்குறளில் அரசியல் எவ்வாறு புதைந்து கிடக்கிறது என்பதை நாம் நோக்கவேண்டும். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த தொல்காப்பிய நூலை எடுத்துப்பாருங்கள். தமிழனின் திரமும் தமிழிலக்கியத்தின் சிறப்பும் எவ்வாறு விரிந்து பரந்து கிடக்கிறதென்று! ஆனால்எமதுநாட்டில் இன்று தமிழ்மொழிக்கு கிடைத்திருக்கும் இடம் இங்கும் அது தலைத்தோங்க வழிகாட்டுகிறது. ஆனால் இதுபூரணத்துவம் பெறவில்லை. எமது நாட்டில் தமிழ்மொழிக்கு முழுஉரிமை கிடைத்த பின்னரே இங்கு நாம் நிம்மதி பெறமுடியும்'' என்றும் திரு. செ. இராசதுரை கூறினர்.

---

## உற்சவம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி மேற்கு மத்தொனிமுங்கோடை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் நேற்று நடைபெற்ற ஆனி உத்தர தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது.

---

ஷில்லாங், ஜூன் 24

அஸ்ஸாதுல் வெள்ளத்தினால் சூழப்பட்டிருந்த ரயிலிலிருந்து 400 பிரயாணிகளும் பத்திரமாகஅழைத்து வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org